# ஜூலை மாத ஆராதனை ஒழுங்குகள்

| நாள் | நேரம் | தலைப்பு | வேத பாடங்கள் | செய்தியளிப்பவர் |
|---|---|---|---|---|
| 01.07.2017 | காலை 5.30மணி | வாக்குத்தத்த ஆராதனை | | அருள்திரு. கிதியோன் தைரியம் |
| 02.07.2017 | காலை 8.30மணி | திருவிருந்து ஆராதனை சீடத்துவம் | 2 அரசர் 2:1-15<br>யோவான் 3;22-30 | அருள்திரு. கிதியோன் தைரியம் |
| 07.07.2017 | மாலை 7.00மணி | சிறப்பு ஆராதனை | | அருள்திரு. கிதியோன் தைரியம் |
| 09.07.2017 | காலை 8.30மணி | நற்செய்தி ஞாயிறு | | அருள்திரு. கிதியோன் தைரியம் |
| 14.07.2017 | மாலை 7.00மணி | சிறப்பு ஆராதனை | | அருள்திரு. கிதியோன் தைரியம் |
| 16.07.2017 | காலை 8.30மணி | இறையியல் கல்வி | உபா 6:1-17<br>மத்தேயு 7:24-29 | அருள்திரு. கிதியோன் தைரியம் |
| 21.07.2017 | மாலை 7.00மணி | சிறப்பு ஆராதனை | | அருள்திரு. கிதியோன் தைரியம் |
| 23.07.2017 | காலை 8.30மணி | திருஅருட்பளி மாற்றத்திற்கான மாற்றம் | எசே 33:1-9<br>யோ 21:15-19 | அருள்திரு. கிதியோன் தைரியம் |
| 28.07.2017 | மாலை 7.00மணி | சிறப்பு ஆராதனை | | அருள்திரு. கிதியோன் தைரியம் |
| 30.07.2017 | காலை 8.30மணி | திருமணம் உடன்படிக்கையின் கொண்டாட்டம் | ஆதி 2:18-25<br>மத் 19:3-9 | அருள்திரு. கிதியோன் தைரியம் |

## ஜூலை மாதம் - 2017

# ஆயர்மடல்

அன்புடையீர்,

**இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் நல்வாழ்த்துக்கள்.**

கடந்த ஜுன் மாதம் முழுமையும் திரியேகக் கடவுள் நம்முடன் இருந்து, நம்மை சுகமாய் வழி நடத்தி, பாதுகாத்து சந்தோஷத்தையும், சமாதானத்தையும் நமக்களித்து, பெலப்படுத்தினார். திரியேகக் கடவுளுக்கு நமது ஸ்தோத்திர பலிகளை ஏறெடுப்போம்.

"கடவுள் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார், நீங்கள் சும்மாயிருப்பீர்கள்" **யாத் : 14:14**

கடவுள் நம் அனைவருக்கும் அருளும் வாக்குதத்தம் இறை ஏற்பது, கடவுள் மீது நாம் வைத்திருக்கும் விசுவாசத்தின் பெரிதான வெளிப்பாடாகும்.

**யாத்திராகமம் : 17:8-16** வரையிலான திருமறைப்பகுதியை கடவுளின் வாக்குத்தத்தத்தை , நாம்புரிந்துக் கொள்ள தியானிப்போம். இந்த வேதப்பகுதியில் 15 ஆம் வசனத்தில், மோசே கடவுளுக்கு ஒரு பலிபீடம் கட்டி அதற்கு ஏகோவா நிசி என்று பெயரிடுகின்றார். எகோவா நிசி என்றால் ஆண்டவரே என் பதாகை (Lord is my Banner) இதை "ஆண்டவரே என் அடையாளம்" என்றும் புரிந்துக் கொள்ளலாம். நாம் யாருடையவர்கள், யாருடைய திருப்பெயரால் இருக்கிறோம் என்பதை இது வெளிப்படுத்துகிறது. கடவுளே என் பதாகை, என் அடையாளம். நாம் கடவுளுடையவர்கள் என்பதால், கடவுள், நமக்காக யுத்தம் செய்கிறவராக இருக்கிறார். நமக்கு விரோதமாக எழும்பும் விரோதிகளுக்கு, பொறாமைகாரர்களுக்கு துன்மார்க்கர்களுக்கு விரோதமாக கடவுள் யுத்தம் செய்கிறார். கடவுளே, இஸ்ரவேல் மக்களுக்காக போரிட்டவர். **(யாத் 17:14).** எனவே இஸ்ரவேல் மக்களை கண்டு, எதிரிகள் பயந்தார்கள். (யாத் 15: 3-4) காரணம், அவர்கள் அல்ல, இஸ்ரவேல் மக்களுக்கு பின்னால் இருந்து, இஸ்ரவேல் மக்களுக்கு தலைவராக இருந்த கடவுளை கண்டு பயந்தார்கள். (உயர்.28:10) எனவே, இந்த பதாகைக்கு பின் ஒரு மாபெரும் உண்மை, ஆற்றல் மற்றும் கொள்கை இருக்கிறது.

இப்படியே, நமக்கு கடவுள் இயேசுவின் வழியாக ஒரு அடையாளத்தை தந்திருக்கிறார். நாம் கிறிஸ்துவுக்குரியவர்கள் என்ற அடையாளத்தை (புதாகையை) பெற்றிருக்கிறோம். **(We are now under the banner of Jesus Christ)**இதன் வலிமை, கொள்கை மற்றும் உண்மை யாவும் பிற மக்கள் நம்மை மதிக்கவும், தீமை செய்யாமல் விலகவும் செய்கிறது. பிசாசு நம்மை பார்த்து விலகி ஓடுகிறது என்றால் அது நம்மை பார்த்து அல்ல, மாறாக, நாம் கொண்டிருக்கும் அடையாளத்தை பார்த்து, நாம் கிறிஸ்தவர்கள், கிறிஸ்துவுக்குரியவர்கள் என்ற பதாகையை (Banner) பார்த்து, பயந்து விலகி ஓடுகிறது. **(லூக்கா.10:20)** ஏனெனில் பிசாசுக்கும், துன்மார்க்கர்களுக்கும் நன்கு தெரிந்த உண்மை. இயேசு கிறிஸ்துவின் ஆற்றல், உலகில் உள்ள அனைத்து ஆற்றலை விட மிக மிக பெரியது, வலிமையானது **(I யோவான் : 4:4)** என்பதுதான்.

நாம் இந்த மாதத்தில் நமக்கு விரோதமாக எழும்பும் அத்தனை ஆற்றலையும், காரியங்களையும், இயேசு கிறிஸ்துவின் மக்கள் என்ற பதாகையின் கீழ், விசுவாசத்தோடே இருந்து வெற்றிக் கொள்ள போகிறோம்.

ஏனெனில் நம் பிரச்சனைகளுக்கு விரோதமாக நம் முன்னேற்றத்தில் தடையாக இருக்கும் விரோதிகளுக்கு எதிராக, நம் வாழ்வின் மகிழ்ச்சியை, சமாதானத்தை சீர்குலைக்கும் துன்மாக்கர்களுக்கு எதிராக, நம் உடல் நலத்தை அழிக்கும் அந்தகாரசக்திகளுக்கு விரோதமாக, கடவுள், நம் இயேசு கிறிஸ்து நம் வாழ்வை போரிடப்போகிறார். யுத்தம் கர்த்தருடையது, அவரே எல்லாவற்றையும் அழித்து வெற்றி சிறந்து நம் வாழ்வை ஆசீர்வதிப்பார்.

**I காமு : 17:45,47** தாவீது பெலிஸ்தியனை நோக்கி நீ பட்டயத்தோடும், ஈட்டியோடும், கேடயத்தோடும் என்னிடத்தில் வருகிறாய். நானோ நீ நிந்தித்த இஸ்ரவேலுடைய இராணுவங்களின் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் நாமத்தில் வருகிறேன், என்றார்.

எனவே, "கர்த்தர் நமக்காக யுத்த பண்ணுவார்" கடவுளின் வாக்கை நன்றாய் கேட்டு அவன் சொன்னதையெல்லாம் செய்வோம். அப்போது நம் சத்துரு கடவுளின் சத்துரு, நம் விரோதி கடவுளின் விரோதி. நம் இயேசுவை வெல்கிறவர் யார்? **(யாத் :23:22) (II நாள் : 10-11, 14-15,17)**

எனவே நாமும் முழு நம்பிக்கையோடே, இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரின் கீழ் இருக்கிறோம் என்ற மனவலிமையோடே, இந்த மாதத்தை வெற்றியாய் கடந்து வருவோம். திரியேகக் கடவுள் நம்மை ஆசீர்வதிப்பாராக. ஆமென்!

இவண்,
உங்கள் அன்பு ஆயர்
அருள்திரு. **J.கிதியோன் தைரியம்**



எப்படிப்பட்ட சோதனைகள் பாடுகள் மற்றும் மழை, வெள்ளம் போன்ற இடுக்கண்கள் நேர்ந்தாலும் எல்லா சூழ்நிலைகளிலும் கண்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருக்கும் உறுதியான நம்பிக்கை கொண்டவர்களாக விழாமல் நம்மைப் பாதுகாத்துக் கொள்ள கர்த்தர் வல்லவராய் இருக்கிறார் – II தீமோத்தேயு 3 ; 12 இல் கூறப்பட்டுள்ள படி கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியால் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்.

எனவே நாம் கூட துன்பங்களை எதிர் கொள்ளும் நேரங்களின் பாடுகளை அனுபவிக்கும் காலங்களில் கடவுளை உறுதியாய் பற்றிக் கொண்டவர்களாக, பரலோகத்தில் இருக்கிற பிதாவின் சித்தத்தின்படி செய்வோம். இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசிக்கப் பிரயாசப்படுவோம். துன்பங்களை பொறுமையோடு சகித்தோமானால் ஜீவனுக்குப் போகிற வழியைக் கண்டடைவோம். கிறிஸ்துவுடனே கூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடே கூட ஆளுகையும் செய்வோம் என்பது நிச்சயமே. இப்படிப்பட்ட கிறிஸ்துவின் வழியைத் தெரிந்து கொண்டு அவருக்குச் சாட்சிகளாக வாழ்ந்து கிறிஸ்துவை மகிமைப்படுத்துவோம். சோர்ந்து போகாமல் உற்சாகத்துடன் கர்த்தரைப் பிற்பற்றுவோம். தேவனுக்கே மகிமை உண்டாகட்டும்.

இப்படிக்கு
கிறிஸ்துவின் பணியில்
தங்கள் உடன் ஊழியர்
**ஆயரம்மா.**

**<u>புதிய செய்தி</u>**

இனி ஒவ்வொரு வெள்ளிக்கிழமை
மாலை **7-7.30 மணி** வரை சிறப்பு ஆராதனை
நடைபெறும். திருச்சபை அன்பர்கள் அனைவரும்
தவறாமல் கலந்து கொள்ளவும்.

## பெண்கள் பகுதி :

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே! ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் நல்வாழ்த்துதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது ஆண்டவரும் மீட்பருமாகிய இயேசு கிறிஸ்து இதுவரை நம்மை வழி நடத்திப் பாதுகாத்து வந்தார். குறிப்பாக வருகின்ற ஜுலை மாதத்தில் புதிய கண்ணோக்கமும் உற்சாகமும் பெற்று கிறிஸ்துவின் நாமத்தை மகிமைப்படுத்த தூய ஆவியாரின் உந்துதலையும், வழிநடத்துதலையும் பெற்றுக் கொண்டவர்களாக செயல்படுவோம்.

பொதுவாக நம் மீட்பர் இயேசு கிறிஸ்துவின் வழியில் நம் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் போது நாம் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வோம் என்பதில் சந்தேகம் இல்லை. இயேசு கற்பிக்கும் வழி விசாலமான வழியன்று. மாறாக இடுக்கமான வழி மற்றும் பாடுகளின் வழி. ஜீவனுக்குப் போகிற வழி நெருக்கமாயிருக்கிறது. மத்தேயு 7:14. இயேசு கிறிஸ்து தன்னுடைய சீடர்களாகும்படி தன்னைப் பின்பற்றும்படியாக பேதுரு எனப்பட்ட சீமோன், அவன் சகோதரன் அந்திரேயா மற்றும் செபேதேயுவின் மகன் யாக்கோபு, அவன் சகோதரன் யோவான் ஆகியோரை அழைத்து அவருக்குப் பின்சென்ற மற்ற ஜனங்களுக்கு போதித்துக் கூறியவைகள் மத்தேயு 5,6 மற்றும் 7 ஆகிய அதிகாரங்களில் கூறப்பட்டுள்ளது. இவை எல்லாவற்றையும் அவர் மிகுந்த அதிகாரத்தோடு போதித்தார் என்று கூறப்பட்டுள்ளது. அவற்றுள் இறுதியாக முக்கியக் கருத்துகளாகக் கூறியவை பிறரை நியாயந் தீர்க்கும் முன்பு நாம் நம்மை சோதித்துப் பார்க்கும்படியாக அழைக்கப்படுகிறோம். மேலும் 11 ஆம் வசனத்தில் கடவுள் தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பார் என்பது அதிக நிச்சயம். ஆனால் நாம் நம் பூலோகப் பிதா கூறிய முக்கிய நியாயப் பிரமாணமாகிய " உன்னைப் போல் பிறரை நேசி " என்ற கற்பனையைக் கடைபித்து வாழ்வோமானால் நாம் கண்மலையின் மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனிதர்களாக விளங்குவோம்.



## HAPPINESS IS INSPIRATION

**I - Increase**
Increase yourself with positive thoughts

**N - Number**
Number your talents

**S - Silent**
Be silent when you are neglected

**P - Pick**
Pick your - Ves & work on it

**I - Identify**
Identify what is God's will / purpose in your life

**R - Rise**
Rise if you Fail

**A - Aim**
Aim to certainity

**T - Touch**
Touch the Heights of Life for Jesus

**I - Initiate**
Initiate New ways for success in Christ Centred Life

**O - Optimistic**
Be an Optimistic to serve the Lord.

**N - New**
Create New ideas & work on it for success.

**Dr. Daphney Gethsi Bennitta**

## கீதங்களை புரிந்து பாடலாமா?

கிறிஸ்தவ கீதங்களின் வரலாறு

## கண்களை ஏறெடுப்பேன்

பியாகு சாபுதாளம்

### பல்லவி

கண்களை ஏறெடுப்பேன் – மாமேருநேராய் என்
கண்களை ஏறெடுப்பேன்

### அனுபல்லவி

விண்மண் உண்டாக்கிய வித்தகனிடமிருந்
தெண்ணில்லா வொத்தாசை என்றனுக்கே வரும் – கண்

### சரணங்கள்

1. காலைத் தள்ளாட வொட்டார் – உறங்காது காப்பவர்
காலைத்தள்ளாட வொட்டார்,
வேலையில் நின் றிஸ்ர வேலரைக் காத்தவர்
காலையும் மாலையும் கண்ணுறங்காதவர். – – கண்

2. பக்க நிழல் அவரே – எனை ஆதரித்திடும்
பக்க நிழல் அவரே,
எக்கால நிலைமையும் எனைச் சேதப்படுத்தாது
முக்காலம் நின்றென்னை நற்காவல் புரியவே – கண்

3. எல்லாத் தீமைகட்கும் – என்னை விலக்கிறே
எல்லாத் தீமைகட்கும்
பொல்லா உலகினில் போக்குவரத்தையும்
நல்லாத்துமாவையும் நாடோறும் காப்பவர் – கண்

ஆசிரியர்: **த. ஐயாத்துரை பாகவதர்**

ஆசிரியர் குறிப்பு: கீர்த்தனை 16–ல் காண்க.

மெட்டு : எந்நாளுமே துதிப்பாய் 303 ஆம் பாடல்

**பாடற்குறிப்பு :** 12–ஆம் சங்கீதம் எருசலேமுக்குத் திருப்பயணத்தில் வந்த மக்களின் சந்தேகத்தை குருவிளக்கும் பாடல் (விண்மண் உண்டாக்கிய), நம்மைப் படைத்த கடவுளே நம்மைக் பாதுகாக்கும் கடவுள், கடவுளை நம்பினோர் கைவிடப்பட்டார் என்ற பொன்மொழிக்கொப்ப காத்தவரே, காப்பவரென, இறந்த கால அனுபவம் மூலம் எதிர்காலத்தின் நிலையை நிகழ்காலத்தின் நம்பிக்கையாக்கிப் பாடுகிறார். மா (பெரிய) – புண்ணிய, பரிசுத்த



## WEDDING DAYS IN JULY

| | |
|---|---|
| July 1 | Mr.V.Robin Bennet Singh & Mrs. Leema Rose |
| July 5 | Mr.Hongton Kalai Arasan & Mrs.Shalini Kalai Arasan |
| July 9 | Mr.G.R.Clement & Mrs. M.Sharmila |
| July 7 | Mr.Philip samson & Mrs.Priscilla Pearline |
| July 10 | Mr.V.R.Freddy Paul Raja & Mrs. V.Merlin |
| July 11 | Mr.B.Manoj Samuel Aaron & Mrs. Preethy Manoj |
| July 12 | Mr. Paul Panneer Selvam & Mrs.Manju Violet Elizabeth |
| July 12 | Mr.T.Raju Daniel & Mrs.E.Stella Raju |

**பிறந்த நாள் மற்றும் திருமண நாள்
கொண்டாடும் அனைவருக்கும் திருச்சபையின்
சார்பில் வாழ்த்துக்களை
தெரிவித்துக் கொள்கிறோம்!**



வாராந்திர வீட்டு **ஜெபக் கூடுகை** ஒவ்வொரு வாரமும்
**செவ்வாய்கிழமை மாலை 7 - 7.30** மணிக்கு
நடைபெறும் திருச்சபை அன்பர்கள்
அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளவும்.

# வேத வினா - விடை போட்டி

## ஜூலை மாத கேள்விகள்

கீழ்க்கண்ட பதங்கள்/வார்த்தைகளுடன் தொடர்புடைய நபர்களின் பெயர்களை எழுதி வசன ஆதாரம் தரவும்.

1. நீங்கள் வெட்டி எடுக்கப்பட்ட கன்மலையை நோக்கிப் பாருங்கள்
2. கொடுமையின் கருவிகள்
3. அடங்காத பொல்லாங்குள்ளது.
4. சாத்தானுடைய கூட்டத்தார்
5. தோட்டக்காரர்
6. என் கண்களில் நீர்த்தாரைகள் ஓடுகிறது.
7. பிரியமான சகோதரன்
8. என் பிள்ளைகளே
9. 1 = (1/2 / 1/2 ) + 1 = (1/2 / 1/2) + 1 = (1/2 / 1/2) +1+1 = 5 = 0

**விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 21-07-2017**

<u>விடைகள் அனுப்ப வேண்டிய முகவரி</u>

**C.S.I. இயேசுவில் புதுவாழ்வு ஆலயம்**
எண் 55, 3வது மனை பிரிவு,
ஆசிரியர் குடியிருப்பு,
லட்சுமிபுரம், சென்னை – 600 099.

குறிப்பு: தெளிவான முகவரியுடன்
சந்தா எண்ணையும் சேர்த்து எழுதி அனுப்பவும்

csinewlifeinjesus@gmail.com 9444 633129
**www.csinewlifeinjesus.org**



# சென்ற மாத போட்டியின் விடைகள்

1. கற்குவியல் – ஆதியாகமம் – 31:46,47
2. நீங்கள் என் ஜனமல்ல ; நான் உங்கள் தேவனாயிருப்பதில்லை – ஓசியா – 1:9
3. தளவரிசைப்படுத்தின மேடை – யோவான் – 19:13
4. லேகியிலுள்ள பள்ளம் – நியாயாதிபதிகள் – 15:19
5. கடுங்காற்று – அப்போஸ்தலர் – 27:14
6. கிரீயாத் யாரீம், பாளையம் – நியாயாதிபதிகள் – 18:12
7. மிருகம், மாட்டைப் போன்ற விலங்கு – யோபு–40:15
8. நீண்ட பாம்பு கோணலான சர்ப்பம் – ஏசாயா – 27:1
9. தேவனுடைய சேனை ஸ்தலம் – ஆதியாகமம் – 32:2
10. குகை –ஆதியாகமம் – 23:9,19

## சரியான விடை எழுதியவர்கள்

1. திருமதி. ஜூபிலி தர்மராஜ்
2. திருமதி. மெரில் ஜெமீமா
3. திருமதி. எஸ்தர் சந்தோஷ்ராஜ்
4. திருமதி. ரோஸ்லெட் செல்லன்
5. திருமதி. கலா சுந்தரகுமார்
6. திருமதி. ஜாய்ஸி விமலா
7. திருமதி. கீதா ஹென்றி
8. திருமதி. லீலா டிக்சன்
9. திருமதி. ஸ்லிட்டிலின் ரிச்சர்ட்

## படித்ததில் பிடித்தது



மூளையினால் முயற்சி
பண்ணாதே...
முழங்காலில் பயிற்சி
பண்ணு.
முடியாததும் முடியும்.
கிடைக்காததும் கிடைக்கும்.



# BIRTHDAYS IN THE MONTH OF JULY

| | |
|---|---|
| July 2 | Mrs.R.Gayathri |
| July 3 | Mrs.S.Chandra |
| July 4 | Mr.Y.Jebashaun |
| July 5 | Mas.Rodger Ben Ronathan |
| July 5 | Miss.A.Niha Nirliptha |
| July 6 | Mr.Joshua Daniel |
| July 6 | Mrs.Sheron mercy |
| July 6 | Mrs.Esther |
| July 7 | Mr.Jacob Theodre |
| July 7 | Mr.P.Parthiban Prasad |
| July 8 | Mr.M.Gladwin Prabhakar |
| July 8 | Mr.S.David Nirmal Raj |
| July 9 | Mrs.K.S.Mary Jeni Suji |
| July 9 | S.Shobana Mala |
| July 9 | Mrs.Jacos Justin Pradeep singh |
| July 11 | Mrs.Preethi Manoj |
| July 12 | Mr.R.Jesudas |
| July 12 | Mr.R.Lalith Kumar |
| July 13 | Master.Ashwin |
| July 14 | Mr.Timothy Gladwin |
| July 15 | Mrs.Shalini Kalai Arasan |
| July 15 | Mrs.Jayaseeli.R |
| July 16 | Miss.Harriet Jenifer |
| July 18 | Mrs.Excelda Selva Kumari |
| July 18 | Mrs.Magdalene Luxon |
| July 19 | Miss.Norrin Marcus |
| July 19 | Master.R.Chrysoprase Samuel |
| July 20 | Mrs.G.Evangelin Lincy |
| July 20 | Mr.Reynold Crisil Sam |
| July 20 | Mr.Stanley Davis |
| July 21 | Mr.E.B.Anbazhagan |
| July 21 | S.Shobana MalaBaby.Charlene Bettina |
| July 21 | Ms.Norrin |
| July 24 | Mrs.R.Godwin Shiny |
| July 25 | Miss.Alef Belicia.R |
| July 25 | Mr.R.Prabhu |
| July 25 | Mr.Joseph Raj |
| July 26 | Mr.P.David |
| July 27 | Miss.Diya Jane |
| July 27 | Master.J.Ricky Matthew |
| July 27 | Mrs.Apsara Kumari Emmanuel |
| July 27 | Mr.J.Brelin Jose Raj |
| July 29 | Mr.A.Joseph |
| July 29 | Miss.J.Jenfer Sherline Salomy |
| July 31 | Baby Joanna Celicia |
| July 31 | Master.Johann Edwin |



பர்வதம் (மேரு) – மலை பிற தெய்வங்களுக்கு வழிபாடு நடக்கும் நடம் மலைகள், சமாரியப் பெண் (யெகோவாவையே) மலையில் வழிபடுவதாக விவிலியம் கூறுவதை நோக்கில், சமாரியர் இஸ்ரவேலரல்லர் என்பதனை நடைமுறையாக்கினர் யூதர் என்பது விளங்கும். நாம் நாட்டிலும் பழனிமலை, சபரிமலை, திருப்பதிமலை, இமயமலை என எல்லா மலைகளையும், குன்றுகளையும் (ஆறுபடை வீடு) இறைவனிருக்கும் இடமாக இந்துக்கள் வழிபடுவது நாமறிந்ததே.

இதனடிப்படையில் திருமறையிலுள்ள சீனாய், மறுரூபமலை, எர்மோன்மலை எருசலேம் மலை, சீயோன் மலை, சிலுவையில் மீட்பை அருளிய கொல்கத்தா மலை ஆகியவற்றையும் நினைவிற்கொண்டு என் கண்களை நோக்கி மாமலையாகிய இயேசுவைப் பார்க்கிறேன் என்கிறார்.

**சரணம் 1 :** (காலைத் தள்ளாடவொட்டார்) நெடிய பயணத்தினால் கால்கள் தளராதபடி செய்தும், (வேலையில்) பணிகளில் இஸ்ரவேலருக்கு உதவியும், (காலையும் மாலையும்) எப்போதும், கண்ணுறங்காத) பிறதெய்வங்களை தூக்கத்திலிருந்து எழுப்ப வேண்டி இருக்கலாம் என எலியா கேலி செய்வதை நினைவு கூறுவோம் ( 1 இராஜா, 18:27) இவ்வாறு உறங்காது காப்பவரை (கண்களை ஏறெடுப்பேன்) நான் பார்க்கிறேன் என நிகழ்காலத்தில் கூறுவதாக விளங்கிக்கொள்வது நல்லதே. காலை 6 மணிக்கு எழுவேன் என்றால் இனியல்ல, இந்நாள் வரையிலும் இன்றும் இனியும் எழுவேன் என்பது விளக்கமாகிறதன்றோ?

**சரணம் 2 :** (பக்க) – அருகில் அதுவும் வலது பக்கத்தில் என்றால் மிகச் சிறந்த உறவுடனும் வலிமையான பாதுகாப்புடனும் ஒருவர் இருப்பதை திருமறை காட்டும், கிறிஸ்து பிதாவின் வலப்புறத்தில் வீற்றிருக்கிறார். சிலுவையில் வலப்பக்கம் இருந்த கள்ளன் மீட்பு பெற்றான். ஆனால் இறைவனே என் பக்கமிருப்பின் என் நிலை மிகவும் ஆதரிக்கப்பட்டதே. நிழலின் அருமை வெயிலில் தெரியும். மீட்பின் வாழ்வு பாவத்திலிருக்கும் நமக்குத் தெரிய வேண்டும். இரவோ, பகலோ, வெயிலோ மழையோ எல்லா நிலைகளிலும் பக்க நிழல் இயேசுவே நிழல் அவரே என ஏகாரத்தில் கூறுவது அவர் மட்டுமே எனக்கு நிழல் ஆவார் வேறு யாரும் அல்லர் என்ற தன் உறுதியை வெளிப்படுத்துகிறார். எனக்கு தீமை வராது (முக்காலமும்) இதுவரையிலும் நேற்றும் இன்றும் நாளையும் என்னோடிருந்து காவல் செய்யவேண்டும் என்பதற்காக அவரையே நோக்கி இருக்கிறேன்.

**சரணம் 3 :** பொல்லாத இவ்வுலகில் என் போக்கும் வரத்தையும் பயணங்களுஙன வரவு, செலவுகளையும் வாழ்க்கையின் தேவைகள் அனைத்துமன்றி (நல்லாத்துமா) நல்ல ஆத்துமாவை காப்பாற்ற வேண்டுமென்றில்லை. ஆத்துமா கெட்டுப் போகாதபடி காப்பாற்றுபவராக அல்லது கேட்டுப் போவதை நன்றாக மாற்றுபவரை நோக்கியிருக்கிறேன்.

**குறிப்பு** : எதுகைத் தொகை பாடல் முழுவதும் அமைத்துள்ளார்.